Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, FEBRUARY 14, 2024

புதன்கிழமை பெப்ரவரி 14, 2024 | ஒளி: 09 கதிர் 193 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## இராஜினாமா



தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பணிப்பாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே, அந்தப் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

அவர் தனது இராஜினாமா கடிதத்தை சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

செவ்வாய்க்கிழமை (13) முதல் அமுலுக்கு வரும் வகையிலேயே அவர் இராஜினாமா கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.



# விஷ பாலில் 7 பேர் கைது

## கலஹாவில் மறைந்திருந்த போது சிக்கினர்


நவி

கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலைய கூண்டுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் இருவருக்கு விஷம் கலந்த பால் கொடுத்த சம்பவம் தொடர்பில், தேடப்பட்டு வந்த சந்தேகநபர்கள், கலஹாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு-ஆட்டுப்பட்டி தெரு பொலிஸ் குழுவினரே, கலஹா- தெல்தோட்டை, கிரேட்வெளி தோட்ட பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து, ஏழு பேரையும் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட ஏழு பேரில், ஐந்து ஆண்களும், பெண்கள் இருவரும் அடங்குகின்றனர்.

தொடர்ச்சி P2

## எம்.பியின் வாகன விபத்தில் டிராக்டரின் சாரதிக்கு காயம்



எம்.யூ.எம்.சனூன்

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பயணித்த அதிசொகுசு வாகனம், சாலியவெவ, 15ஆவது மைல்கல் பிரதேசத்தில் கை டிராக்டரில் மோதுண்டு விபத்துக்கு உள்ளானதில், கை டிராக்டரின் சாரதி காயமடைந்து, புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஏ9 வீதி விபத்தில் அறுவர் காயம்

### இராணுவ டிரக் வாகனமும் புரண்டது


பு.கஜிந்தன்

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தும் இராணுவத்தினரின் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதில் அறுவர் காயமடைந்துள்ளனர்.



தொடர்ச்சி P2

## உரிய காலத்தில் தேர்தல்




ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்துக்குள் நடத்தப்படும் என்பதுடன் குறிப்பிட்ட காலவரையறுக்குள், அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும். இதற்கான நிதி, 2025 வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தேர்தல்களை நடத்தும் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவைச் சார்ந்துள்ளதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணைக்குழுவுடன் அரசாங்கம் இணைந்து செயற்படும் என்றும் அப்பிரிவு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெயரை சேர்க்க இலஞ்சம் வாங்கியவருக்கு விளக்கமறியல்

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 10,000 ரூபாய் இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் ஹம்பாந்தோட்டை சமோதகம கிராம உத்தியோகத்தரை (grama sevaka) விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் செவ்வாய்க்கிழமை (13) உத்தரவிட்டுள்ளார்.

சுசந்த உதய குமார என்ற கிராம உத்தியோகஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஹம்பாந்தோட்டை சமோதகம என்ற சந்தேக நபர் சமோதகமவில் புதிதாகக் குடியேறிய ஒருவரின் வீட்டிற்கு மின்சாரம் பெற்றுக் கொள்வதற்காக, வாக்காளர் இடாப்பில் தனது பெயரைப் பதிவு செய்வதற்கு 15 ஆயிரம் இலஞ்சம் கேட்டபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

வீட்டு உரிமையாளரிடம் இருந்து இந்த இலஞ்சப் பணம் பெப்ரவரி 1ஆம் திகதி பெறப்பட்டதுடன், அவர் கைது செய்யப்பட்டு ஹம்பாந்தோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர், செவ்வாய்க்கிழமை (13) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

தொடர்ச்சி P2

## பாலியல் துஷ்பிரயோகம்: பொலிஸூக்கு 7 வருட சிறை

ஆ.ரமேஸ்.

திருமணம் ஆகாத 35 வயதான பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகஸ்தரை குற்றவாளியாக இனங்கண்ட நுவரெலியா மேல் நீதிமன்றம் அவருக்குக் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது, குற்றவாளிக்கு ஏழு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை, 20 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு05 லட்சம் ரூபாய் அபராத தொகை வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2




## கடும் பாதிப்பு...

சுகாதார தொழிற்சங்கங்கள் 72 நாடளாவிய ரீதியில், செவ்வாய்க்கிழமை (13) காலை 8.30 மணிமுதல் முன்னெடுத்த பணிபகிஷ்கரிப்பால் நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகினர். இந்த நிலைமையை சமாளிப்பதற்கு இராணுவத்தினர் களமிறக்கப்பட்டனர். எனினும், வைத்தியசாலைகளில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில்,இந்த பணிபகிஷ்கரிப்பை இன்றும் (14) மேற்கொள்ளவுள்ளதாக சங்கங்கள் அறிவித்துள்ளன. (மேலதிக படங்கள், பக்கம் 5)




## நிகழ்நிலை காப்பு சட்டத்தை திருத்த அங்கிகாரம்

நிகழ்நிலை காப்பு சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிகழ்நிலை காப்பு சட்டத்துடன் தொடர்புடைய சில திருத்தங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அமைச்சரவைக்கு 30-இற்கும் மேற்பட்ட திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “கட்சியின் வங்குரோத்து நாட்டின் வங்குரோத்து”

தேசியக் கட்சியின் வங்குரோத்து நிலை நாட்டின் வங்குரோத்து நிலையைக் குறிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சி வலுவடைந்து வருவதுடன் நாடும் பலமடைய ஆரம்பித்துள்ளது என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவின், செவ்வாய்க்கிழமை (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ரங்கே பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## “ஏல பூமியாக மாற்றிவிட்டார்”

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

வங்குரோத்து நாட்டில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் பெற முடியாதவர், நாட்டை வங்குரோத்தடையச் செய்த தரப்பினருடன் கைகோர்த்துக் கொண்டு, ஜனாதிபதி பதவியை பெற்று, தற்போது நாட்டையும் ஏல பூமியாக மாற்றிவிட்டார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டினார்.

தொடர்ச்சி P2

## பிணவல் மோகத்தால் நாய் எரித்துக்கொலை



உயர் ரக பெட்டை (பிணவல்) நாயுடன், உறவுக்கொள்வதற்காக வந்துதிரியும் சாதாரண நாயொன்றை எரித்துக்கொன்றார் என சந்தேகிக்கப்படும், 65 வயதான நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என யக்கல பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## எம்.பியின் வாகன விபத்தில் டிராக்டரின் சாரதிக்கு காயம்

இந்த சம்பவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான அலி சப்ரி ரஹீம், தன்னுடைய சாரதியுடன் புத்தளத்தில் இருந்து அனுராதபுரத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த போதே இவ்விபத்து செவ்வாய்க்கிழமை (13) அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. முன்னால் வந்துகொண்டிருந்த கை டிராக்டரில் மோதுண்டே இவ்விபத்து சம்பவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் பாராளுமன்ற உறுப்பினரின் அதிசொகுசு வாகனத்துக்குக் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## ஏ9 வீதி விபத்தில் அறுவர் காயம்

இந்த சம்பவம், A9 வீதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொக்காவில் பகுதியில் திங்கட்கிழமை (12) மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

துணுக்காயிலிருந்து காரைநகர் நோக்கிப் பயணித்த அரச பேருந்து எதிரே பயணித்த இராணுவ டிரக் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

விபத்துக்குள்ளான இராணுவ வாகனம் குடைசாய்ந்ததில் 4 இராணுவத்தினர் காயமடைந்துள்ளதுடன், பேருந்தில் பயணித்த பெண் ஒருவரும் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பேருந்தைச் செலுத்திய சாரதியும் காயங்களுடன் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அந்த சாரதியை மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகத் தெரிவித்த மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## நிகழ்நிலை காப்பு சட்டத்தை திருத்த அங்கிகாரம்

பல்வேறு தரப்பினரின் எதிர்ப்பை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சமூக ஊடக வலையமைப்புகளுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இந்த திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பல தரப்பினரும் இந்த சட்டத்தின் பல பிரிவுகளை விமர்சித்திருந்தனர்.எனினும் பெப்ரவரி முதலாம் திகதி பாராளுமன்றத்தில் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

## பெயரை சேர்க்க இலஞ்சம் வாங்கியவருக்கு விளக்கமறியல்

சந்தேகநபரான கிராம சேவகர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, உரிய குற்றச்சாட்டுகளை தமது கட்சிக்காரர் மறுப்பதாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதவான், சந்தேகநபரான கிராம சேவகரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## "கட்சியின் வங்குரோத்து நாட்டின் வங்குரோத்து"

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின், கட்டுகம்பொல தொகுதியின் முன்னாள் அமைப்பாளரும் முன்னாள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரான காமினி ஜயவிக்ரம பெரேராவின் மகனுமான அசங்க பெரேராவும் கலந்துகொண்டார்.

தொடர்ந்து கருத்துரைத்த பாலித ரங்க பண்டார, குருநாகல் மாவட்டத்தில் சம்பியனாக இருந்த ஜயவிக்ரம பெரேராவின் மகன் ஐ.தே.க.வில் இணைந்துகொண்டமை தனித்துவமான நிகழ்வாகும் என்றார்.

## விஷ பாலில் 7 பேர் கைது

கொழும்பு, ஜிந்துபிட்டிய பிரதேசத்தில் ஒருவரைச் சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவருக்கு விஷம் கலந்த பால் கொடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையத்தில் உள்ள கூண்டுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பால் பாக்கெட்டுகளில் சயனைட் விஷம் கலந்திருந்தமை கண்டறியப்பட்டது. அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், சந்தேக நபர், பால் பாக்கெட்டுகளை கொள்வனவு செய்வது தொடர்பான சிசிடிவி காட்சிகளும் சிக்கியுள்ளன.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு, அடைத்து வைக்கப்பட்டிருந்த இருவரிடமும் பால் பாக்கெட்டை வழங்கியதையடுத்து, அவற்றைக் குடித்த இருவரும் மயங்கி விட்டனர். ஆபத்தான நிலையில்,கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கலஹா கிரேட்வேலி தோட்டத்தைச் சேர்ந்த ஒருவர், மருதானையில் பணிபுரியும் போது, பிரதான சந்தேகநபருக்கு தங்குமிடத்தை வழங்கியுள்ளமை கண்டறியப்பட்டது. அங்கு வைத்தே இந்த கொலையைத் திட்டமிட்டதாகக் கூறப்படுகின்றது. அந்த குழுவினர், கலஹா, கிரேட்வலி தோட்டத்தில் உள்ள அவரது வீட்டில் பதுங்கியிருப்பதாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

ஜிந்துபிட்டி பிரதேசத்தில் ஜனவரி 24ஆம் திகதி துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற போது, அங்கு வந்திருந்த ஒருவரை பிரதேசவாசிகள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இந்தக் கொலை சந்தேகநபர்களுக்கு, விஷம் கலந்த பால் பாக்கெட்டுகளை வழங்கியவர்களும் ஒரே குழுவைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

இந்நிலையில், கலஹா-கிரேட்வேலி தோட்டத்திலுள்ள வீடொன்றில் புதிதாக வந்தவர்கள் குழுவொன்று தங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலின் பேரில் புலனாய்வுப் பிரிவினர் அவர்களை அடையாளம் கண்டுள்ளனர். அதனையடுத்து ஆட்டுபட்டிதெரு வீதி பொலிஸ் குழுவொன்று, கலஹாவுக்கு விரைந்து அங்கிருந்த ஏழுபேரையும் கைது செய்து, ஆட்டுபட்டிதெரு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

## பாலியல் துஷ்பிரயோகம்: பொலிஸூக்கு 7 வருட சிறை

இந்த தீர்ப்பை, நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரிய, செவ்வாய்க்கிழமை (13) வழங்கினார்.

கந்தப்பளை ஹைபொரஸ்ட் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தராக கடமையாற்றிய லக்ஷ்மன் சாலிய பண்டார வீரசிங்க என்பவர் 35 வயதுடைய திருமணமாகாத பெண்ணொருவரை ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார். தான் கடமையில் இருந்தவேளையிலேயே இக்குற்றத்தைப் புரிந்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு எதிராகக் கடந்த 2019ஆம் ஆண்டு நுவரெலியா மேல் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்தது.

கடந்த ஐந்து வருடங்களாக விசாரணை செய்யப்பட்டு வந்த இந்த வழக்கின் சாட்சியங்கள் அடிப்படையில் பொலிஸ் உத்தியோகஸ்தரான லக்ஷமன் சாலிய பண்டார வீரசிங்க என்பவர் நுவரெலியா மேல் நீதி மன்றத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்டார்.

> **கடந்த ஐந்து வருடங்களாக விசாரணை செய்யப்பட்டு வந்த இந்த வழக்கின் சாட்சியங்கள் அடிப்படையில் பொலிஸ் உத்தியோகஸ்தரான லக்ஷமன் சாலிய பண்டார வீரசிங்க என்பவர் நுவரெலியா மேல் நீதி மன்றத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்டார்**

அவருக்கே மேலே குறிப்பிட்டவாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 5 இலட்சம் ரூபாய் அபராத தொகை வழங்காத பட்சத்தில் மேலும் மூன்று வருடச் சிறைத் தண்டனையும், தண்டப்பணம் 20 ஆயிரம் ரூபாயை நீதிமன்றத்துக்குச் செலுத்தாத பட்சத்தில் மேலும் ஆறு மாதங்கள் சிறை தண்டனையும் குற்றவாளி அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## "ஏல பூமியாக மாற்றிவிட்டார்"

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத் திட்டத்தின் 94 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், இரத்தினபுரி, நிவிதிகல, எலபாத மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (13) நடைபெற்றது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் மக்களுக்கு வழங்கும் இலவச மருந்துகளில் கூட திருடி வருகின்றனர். மனித இம்யூனோகுளோபுலின், மெரோபெனெம் போன்ற பல மருந்துகளில் திருடி வருகின்றனர். மில்லியன் கணக்கான டொலர்கள் பெறுமதியான மருந்துகளை முறையற்ற வகையில் களஞ்சியப்படுத்தி வைத்தமையினால், மருந்துகள் பாவனைக்கு உகந்தா விதமாக அழிந்து விட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறான ஊழலைக் கண்டு ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்த போது, அரசாங்கத்தில் இருந்து 113 பேர் இந்த தரமற்ற மருந்துகளுக்கு தமது கைகளை உயர்த்தி ஆதரவு தெரிவித்தனர். இது போதாக் குறைக்கு நாட்டை ஏல பூமியாக மாற்றியுள்ளனர்.

காலி கிந்தோட்டை Plywood Manufacturers கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 17 ஏக்கரை 82 இலட்சத்திற்கு மொத்தமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. அந்த தொழிலதிபர் குறித்த நிலத்தை ஏலத்திற்கு விட்டுள்ளார். இது தொடர்பாகப் பாராளுமன்ற ஆலோசனைக் குழுவில் விசாரணை நடந்து வரும் போதே இவ்வாறு ஏலம் விடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அமைச்சர்கள் ஒவ்வொரு இடமாக விற்றுச் சிரித்து மகிழ்ந்து வருகின்றனர்.நாட்டின் குடிமக்களுக்கும், அடுத்தடுத்த தலைமுறைகளுக்குச் சொந்தமான இந்த தேசிய வளங்களே இவ்வாறு ஏலம் விடப்பட்டு வருகின்றன. இவ்வாறு சொத்துக்களை விற்பனை செய்வது பாரிய அவலமாகும் என்றார்.

> **நாடு எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு இந்த ஆட்சியாளர்களிடம் தீர்வில்லை. ஒரு தரப்பினர் சிங்களம் மட்டும் என்று சொல்லும் போது, மற்றைய தரப்பினர் தமிழ் மட்டுமே என கூறுகின்றனர். இப்படியே போனால் பழைய பயணத்தை இன்னும் 75 வருடங்களுக்கும் தொடரலாம். இதை விடுத்து புதிய காலத்திற்கு ஏற்றவாறு மாற்றங்களுக்கு உட்படுத்துவது தான் இங்குப் பிரதானமானது**

மக்கள் கோரும் முறைமை மாற்றத்தை ஐக்கிய மக்கள் சக்தி கட்சி ஏலவே ஆரம்பித்து விட்டது. பதவி ஆசை இல்லாமல்,வெற்றுப் பேச்சுக்களை விடுத்து ஐக்கிய மக்கள் சக்தியே செயற்பாட்டில் இதைக் காண்பித்துள்ளது. 75 வருட கால வரலாற்றில், எதிர்க்கட்சியாக இருந்து மக்களுக்காக உழைத்த ஒரே கட்சி ஐக்கிய மக்கள் சக்தியாகும். எனவே, 2019 போன்ற கனவு உலகில் மிதந்து நாட்டை மீண்டும் அழிவின் வாயிலுக்கு இட்டுச் செல்லாமல் இருக்கும் முடிவை மக்களே எடுக்க வேண்டும். நாடு எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு இந்த ஆட்சியாளர்களிடம் தீர்வில்லை. ஒரு தரப்பினர் சிங்களம் மட்டும் என்று சொல்லும் போது, மற்றைய தரப்பினர் தமிழ் மட்டுமே என கூறுகின்றனர். இப்படியே போனால் பழைய பயணத்தை இன்னும் 75 வருடங்களுக்கும் தொடரலாம். இதை விடுத்து புதிய காலத்திற்கு ஏற்றவாறு மாற்றங்களுக்கு உட்படுத்துவது தான் இங்குப் பிரதானமானது. வாக்குகளை நோக்காக் கொண்டல்லாது பிள்ளைகளுக்காக உண்மையைப் பேச வேண்டும் என்றார்.

## பிணவல் மோகத்தால் நாய் எரித்துக்கொலை

கம்பஹா- மேல் யாகொட பிரதேசத்தில் வீடொன்றில் வளர்க்கப்பட்ட நாயையே மேற்படி நபர், தீ வைத்து எரித்துக்கொன்றார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எரித்துக் கொல்லப்பட்ட நாயின் உரிமையாளர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் விசாரணையின் பிரகாரம், வீட்டில் வளர்க்கப்படும் உயர் இன நாயுடன், உறவு கொள்வதற்காகச் சாதாரண நாய் வந்துசெல்கின்றது. இதனால் கோபமடைந்தே, பெற்றோல் ஊற்றி, நாயை எரித்துக்கொண்டதாகக் கைது செய்யப்பட்டுள்ள நபர் தெரிவித்துள்ளார்.

## "நிறைவேற்று அதிகாரம் அவசியமாகவே உள்ளது"

நாட்டில் நடைமுறையிலுள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை மூலம் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று ஒப்புவதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம் மற்றும் பாராளுமன்றம் ஆகியவற்றுக்கு இடையில் சம தன்மை கொண்ட அதிகாரம் பேணப்பட வேண்டும் என்ற கருத்தும் தனக்கு ஆளமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பருத்துத்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில், செவ்வாய்க்கிழமை (13) நடைபெற்றது. இதன்பின்னர் ஊடகங்குக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காலத்துக்குக் காலம் அரசியல் காரணங்களுக்காக விவாதிக்கப்படும் விடயங்களுள் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி விடயமும் ஒன்று. இதேநேரம் தமிழரது தரப்பை எடுத்துக்கொண்டால் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை கொண்டுவரப்பட்ட வேளையில் அதை வரவேற்றார்கள். அதன்பின்னர் அது தேவை இல்லை என இன்னொரு தரப்பு கூறியபோதும் அதையும் வரவேற்றுள்ள நிலைமைதான் இருக்கின்றது.

ஆனால் இன்று நாடு இருக்கின்ற ஒரு சூழலில் நிறைவேற்று அதிகாரத்திற்குரிய அவசியம் இருப்பதாகவே தெரிகின்றது. காரணம் நிறைவேற்று அதிகாரத்துக்கு ஊடாகத்தான் நாம் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என நான் நம்புகின்றேன்.

இதேநேரம் நிறைவேற்று அதிகாரம் என்பது உலகின் வேறு பல நாடுகளிலும் இருக்கின்ற ஒரு விடயம்தான். இருந்தபோதும் பாராளுமன்றத்துக்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையில் சம தன்மை பேணப்படவேண்டும் என்ற அபிப்பிராயத்தையே நான் கொண்டுள்ளேன்.

மேலும் நாடு தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருக்கவேண்டும் என நான் நினைக்கின்றேன். அதுமட்டுமல்லாது, இதை நான் பல தடவைகள் பொதுவெளியிலும் கூறி வந்திருக்கின்றேன்.

அதேநேரம் தென்னிலங்கையில் நாட்டை சீர்தூக்கிச் செல்லக்கூடிய வகையில் வேறு தலைவர்கள் இருப்பதாகவும் எனக்கு தெரியவில்லை. அதாவது செயலற்றுக் கிடந்த இருந்த நாட்டை மிகக் குறுகிய காலத்துக்குள் முடியுமானவரைச் சீர் செய்து ஓடச் செய்துள்ளார் இன்றைய ஜனாதிபதி ரணில். அவர் தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருப்பாரானால் நாடு முழுமையாக வளர்ச்சிபெறும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்றார்.



இதேநேரம், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைப் பொறுத்தளவில் நடைமுறை சாத்தியமான அரசியல் தீர்வையே கொண்டுள்ளோம். குறிப்பாக இலங்கை-இந்திய ஒப்பந்தம் தான் தீர்வுக்கான சிறந்த ஆரம்பம் என நாம் பல தசாப்தங்களாகக் கூறிவந்துள்ளோம்.

இதையே அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலும் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் குடாநாட்டில் அதிகரித்துள்ள சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது மிக அவசியமானதாக உள்ளது. இதற்காக ஒவ்வொரு பிரதேசங்களிலும் கிராமிய குழுக்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளேன்.

இதனூடாக சமூகவிரோத செயற்பாடுகள், போதைப்பொருள் மற்றும் கால்நடை களவு உள்ளிட்ட பல்வேறு சமூக விரோத செயற்பாடுகளைக் கட்டப்படுத்த முடியும் என நம்புகின்றேன் என்றார்.

## தனிநபர் உரிமைகளை பாதுகாக்க

# “விரைவில் விதிமுறை”

தனிப்பட்ட தரவு தயாரிக்கும் பணியில் ஈடுபடும் அரச மற்றும் தனியார்த்துறை நிறுவனங்களால் தனிநபர் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் வரையறை செய்வது தொடர்பிலான விதிமுறைகள் விரைவில் உருவாக்கப்படும் என தரவு பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அர்ஜூன ஹேரத் தெரிவித்தார்.

இதன் ஊடாக தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு, டிஜிட்டல் பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்திற்கான வசதிகளை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

2022இன் 9ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தொழில்நுட்ப விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்குள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் பகுதி V ஜூலை 2023 முதல் நடைமுறைக்கு வருவதோடு, அதிகாரசபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் சபையை நியமிக்க ஜனாதிபதிக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அதற்கமைய ஒக்டோபர் 2023இல், இந்த அதிகாரசபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டது.

பொதுமக்களின் தனிப்பட்ட தரவுகளைத் தயாரிக்கும் பணியில் தொடர்புபட்டுள்ள அரச மற்றும் தனியார்த்துறை நிறுவனங்களால் பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை ஒழுங்குபடுத்தும் ஒரு நிறுவனமாக இந்த அதிகாரசபை செயல்படுகிறது.

மேலும், தரவு பாதுகாப்பு சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு டிஜிட்டல் பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்திற்கான வசதிகளை வழங்கவும் அதிகாரசபை எதிர்பார்க்கிறது.

இந்த புதிய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, 2025 மார்ச் 18ஆம் திகதி முதல் தனிப்பட்ட தரவு பாதுகாப்புச் சட்டம் முழுமையாக நடைமுறைக்கு வரும். மேலும், ‘தேவையற்ற செய்திகளைப் பரப்புவதற்கான தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துதல்’ தொடர்பில் இந்தச் சட்டத்தின் பகுதி IV நடைமுறைக்கு வரும் திகதி, சபாநாயகரின் சான்றுப்படுத்தும் திகதியிலிருந்து 24 மாதங்களுக்குக் குறையாத மற்றும் 48 மாதங்களுக்கு உட்பட்ட திகதியாக இருக்க வேண்டும். எனவே 2025 மார்ச் 2025ஆம் திகதிக்குப் பின்னர் இது நடைமுறைக்கு வரும்.

இந்தச் சட்டத்தின் VI, VIII, IX மற்றும் X ஆகிய பகுதிகளை 01 டிசம்பர் 2023 முதல் நடைமுறைப்படுத்துவதன் மூலம், அதிகாரசபைக்கு தேவையான நிதி வசதிகள் கிடைப்பதோடு, சட்டத்தின் 52ஆவது பிரிவின் கீழ் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் அதிகாரசபையின் பணியாளர் குழுவிற்கு ஆட்சேர்ப்பது தொடர்பான சட்டதிட்டங்களை வகுப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கவும் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணியாளர்களுக்குரிய அதிகாரங்களை வழங்கவும் ஏனைய நடவடிக்கைகள் ஊடாக அதிகாரசபையின் பணிகளை முழுமையாக செயற்பாட்டு நிலைக்குக் கொண்டுவரவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

மேலும், அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான பணியாளர்களை திறந்த, வெளிப்படையான மற்றும் போட்டித்தன்மையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்து நியமனம் செய்வதற்கும், 2025 மார்ச் 18ஆம் திகதிக்கு முன்னர் நிறுவன உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், முக்கிய தரப்பினர்களை தெளிவுபடுத்தும் பணியை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கும் இந்த வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தனிப்பட்ட தரவு பாதுகாப்பு அதிகாரசபைக்கு வாய்ப்பு ஏற்படும்.

2024இன் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளில் தொடர்புள்ள தரப்பினர்களின் கருத்துக்களை பெற்று தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கை கட்டமைப்பு மற்றும் சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைத் தயாரிக்கவும் 2024இன் நான்காவது காலாண்டில் மற்றும் 2025இன் முதல் காலாண்டில் அந்தக் கொள்கைகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பில் தெளிவுபடுத்தவும் தரவு பாதுகாப்பு அதிகாரசபை எதிர்பார்க்கிறது.

# மாணிக்ககல் அகழ்ந்த மூவர் கைது

மொனராகலை - ஒக்கம்பிட்டிய பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்ட மூவரை ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் திங்கட்கிழமை(12) கைது செய்துள்ளனர்.

மொனராகலை ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 29, 63 மற்றும் 51 வயதுடையவர்கள் என்று தெரிவித்துள்ள அதிகாரிகள், அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களுடன் அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

# நிறுத்தியிருந்த கார் தீக்கிரை



வாதுவ-பொத்துப்பிட்டிய கல்லுபர பகுதியில் செவ்வாய்க்கிழமை (13) நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் எரிந்து முற்றாகத் தீக்கிரையாகியுள்ளது.

களுத்துறை மாநகர சபையின் தீயணைப்பு பிரிவைச் சேர்ந்த தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

வாகனத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக தீ பற்றி எரிந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேலும், குறித்த தீவிபத்தில் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

## மின்சார வேலியில் சிக்கி

# இரு விவசாயிகள் மரணம்

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு - குடும்பிமலை பிரதேசத்தில் பண்ணை ஒன்றில் சட்டவிரேதமாக அமைக்கப்பட்ட மின்சார வேலியில் மின்சாரம் தாக்கி மாமன் மருமகனாகிய இரு விவசாயிகள் உயிரிழந்த நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை (13) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடும்பிமலையைச் சேர்ந்த 51 வயதுடைய ஆறுமுகம் லோகநாதன், பலிபாய்ந்த கல்லைச் சேர்ந்த 21 வயதுடைய விநாயகமூர்த்தி சுதர்சன் ஆகிய இருவருமே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள குடும்பிமலை - ஈச்சையடி பகுதியில் முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவருக்கு சொந்தமான பண்ணையை வாழைச்சேனையைச் சேர்ந்த நபர் ஒருவர் குத்தகைக்கு எடுத்து செய்துவரும் நிலையில் காட்டு விலங்குகள் உள்நுழைவதை தடுப்பதற்காக சட்டவிரோதமாக மின்சாரத்தை பெற்று பண்ணையை சுற்றி மின்சார வேலி அமைத்துள்ளார்.

குறித்த பண்ணைபகுதியை அருகில் வேளாண்மை அறுவடைக்கு சென்று மாமனாரும் மருமகனும் திங்கட்கிழமை (12) சென்றுள்ள நிலையில், செவ்வாய்க்கிழமை (13) காலை பணனைக்கு சென்ற உரிமையாளர் மின்சார வேலியில் மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளதை கண்டு பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், நீதிமன்ற உத்தரவை பெற்று சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்துவருவதாக குறிப்பிட்டுள்ளனர்.

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் தொடர்பான தெளிவூட்டல்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடியில் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு திங்கட்கிழமை (12) மாலை காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன கேட்போர் கூடத்தில், ஆய்வுக்கும மேம்பாட்டிற்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம் மற்றும் பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளது.

இந்த கருத்தரங்கில், தற்போது நமது நாட்டில் அமுலுக்கு வந்திருக்கும் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் தொடர்பாக சட்டத்தரணி ஏ.வி.பெனிஸ்லஸ் துஷான் மற்றும் சட்டத்தரணி பாரா பிர்தௌஸ் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இதில் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன செயலாளர் ஏ.எல்.எம்.சபீல் நழீமி, ஆய்வுக்கும மேம்பாட்டிற்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியத்தின் தலைவி அனீஸா பிர்தௌஸ், சட்டத்தரணி எ.உவைஸ் உட்பட உலமாக்கள் சிவில் சமூக பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# ஐஸூடன் நால்வர் கைது

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த நான்கு பேர் ஹட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் பிரதேசத்தில் முச்சக்கரவண்டியொன்றை சோதனையிட்டபோது, அதில் இருந்த நால்வரும் 100 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கொட்டகலை, வட்டவளை, ஹட்டன் மற்றும் பத்தனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ரூ.1,000க்கு ஐ போன் விற்ற யாசகர் கைது

■ எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடை பகுதியில் யாசகர் ஒருவர் ஐ போன் ஒன்றை திருடி அதனை 1,000 ரூபாய்க்கு விற்பனை செய்துள்ள சம்பவமொன்று திங்கட்கிழமை (12) இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தன்று யாசகம் கேட்டு வந்த முதியவர் ஒருவர், வீடு ஒன்றிலிருந்த பெறுமதி வாய்ந்த ஐ போன் ஒன்றை திருடிச் சென்றுள்ளார்.

இவ்வாறு திருடிச் சென்ற நபரின் புகைப்படத்தை சி.சி.ரி.வியின் உதவியுடன் முகநூலில் பதிவிட்டதின் பின்னர் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர் வசமாக சிக்கியுள்ளார்.

திருடிய ஐ போனை 1,000 ரூபாய்க்கு விற்பன செய்த அந்நபர் அந்தப் பணத்தில் மது அருந்திக் கொண்டிருந்த நிலையில் அவர் பிடிபட்டுள்ளார்.

இவ்வாறு திருடப்பட்ட ஐ போன் உரிமையாளரின் கைக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நலன்புரி நன்மைகள் பிரிவு திறப்பு

■ பாறுக் ஷிஹான்

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் அசுவெசும நலன்புரி நன்மைகளைப் பொதுமக்களுக்கு இலகுவாகப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் “நலன்புரி நன்மைகள் பிரிவு” இன்று கல்முனை பிரதேச செயலக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

அரசாங்கம் அசுவெசும திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுத்தவுள்ள நிலையில் கல்முனை பிரதேச செயலக பிரிவிலுள்ள பொதுமக்களின் நன்மை கருதியே இதற்கான தனியான பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜெளபர், நிருவாக உத்தியோகத்தர் ஏ.சி.எம்.பளீல், நிருவாக கிராம உத்தியோகத்தர் உபுல் குமார, அபிவிருத்தி இணைப்பாளர் ஏ.யாசீன் பாவா, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (திட்டமிடல்) ஏ.எஸ்.எம்.முஜாஹித், நலன்புரி நன்மைகள் பிரிவு பொறுப்பாளர் ஏ.எல்.ஏ.நஜீபர் உட்பட சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





## வெற்றிடங்கள்

**தொழிற்சாலை பணியாளர்கள் தேவை**

குளியாப்பிட்டியவில் தென்னந் தும்புடன் தொடர்புடைய விவசாய பயிர்கள் மற்றும் பல்வேறு தாவரங்களை நடவு செய்வதற்கு, மத்திய உற்பத்திகளை மேற்கொண்டு ஏற்றுமதி செய்யும் நிறுவனத்திற்கு தொழிற்சாலை பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளனர்.

**பணி,**

ஒரு நாளைக்கு 3 வேலை மாற்றத்தில் பணி மாறுதல்.
கோரிக்கையின் பேரில் இரண்டு வேலைமாற்றத்தில் வேலை செய்யலாம்

**சம்பளம்**

மாதம் 75,000 ரூபாய் சம்பளம் பெரும் திறன்
மாதாந்த வருகை கொடுப்பனவுகள்
ஊக்குவிப்பு கொடுப்பனவு

**தங்குமிடம்**

இலவசம்

**சாப்பாடு**

மலிவு விலையில் வழங்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு- 0770038967, 0748272480,


# சடலம் சிக்கியதால் ரயில்கள் தாமதம்

ரயிலில் மோதுண்ட நபரின் சடலம், இரண்டு தடங்களுக்கு இடையில் சிக்கியதால், கரையோர ரயில் சேவைகள் சில மணிநேரம் தாமதமடைந்தன என ரயில்வே கட்டுப்பாட்டறை அறிவித்துள்ளது.

மகொன பிரதேசத்திலேயே ரயிலுடன் நபரொருவர் மோதியுள்ளார். அவருடைய சடலம் இதுவரையிலும் அடையாளம் காணப்படவில்லை என கட்டுப்பாட்டறை அறிவித்துள்ளது.

இதனால், ருகுணு குமார் மற்றும் காலி குமாரி விரைவு ரயில்கள் முறையே 35 மற்றும் 30 நிமிடங்கள் தாமதமாகின என களுத்துறை ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

காலியில் இருந்து கல்கிஸை வரைக்கும் பயணித்த 8319 என்ற இலக்கத்தைக் கொண்ட மெதுவாக பயணிக்கும் ரயிலிலேயே மோதுண்டுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரமங்களுக்கு மத்தியில் மீட்கப்பட்ட சடலம், பயாகல ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பயாகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குளவி கொட்டியதால் 12 மாணவர்கள் பாதிப்பு

■ செ.தி. பெருமாள்



நல்லத்தண்ணி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 13 வயதுடைய மாணவ மாணவிகள் சிலர் திங்கட்கிழமை (12) மாலை 6 மணியளவில் குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில், மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் .

குறித்த மாணவ மாணவிகள் தனியார் வகுப்புக்குச் சென்று திரும்பி வரும் போதே இச் சம்பவத்திற்கு முகங்கொடுத்துள்ளதுடன், அதில் 3 ஆண்கள் மற்றும் 9 பெண்கள் உள்ளடங்குவதாக நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்துள்ளார்.

# வைத்தியர்களின் ஆலோசனைகளை பின்பற்றுவது அவசியம்

வைத்தியசாலைகளுக்குச் சென்று மருந்தெடுக்க அச்சமடையும் நபர்கள், இதெல்லாம் என்ன? நோய், கொஞ்சம் சுடுநீரைக் குடித்தால் அல்லது மஞ்சளை அள்ளி பூசிக்கொண்டால் எல்லாமே சரியாகிவிடும் என நினைக்கும் அளவுக்கு மருத்துவத்துறை சென்றுள்ளது. முன்னைய காலங்களில், கைவைத்தியமே சிறந்ததாக இருந்தது.

தற்போதும் சில வருத்தங்களைக் குணப்படுத்த கை வைத்தியம் சாத்தியமானதாக இருக்கிறது. எனினும், எல்லா வருத்தங்களுக்கு அது சரிபட்டுவராது. தொற்று நோய்களும், தொற்றா நோய்களும் தலைவிரித்து ஆடுகின்றன. நம்முடன் நேற்று உயிர்வாழ்ந்தவர்கள் மறுநாள் மரணமடைந்திருப்பார். சிலரது மரணங்களுக்குத் தொற்றா நோய்களே பிரதான காரணங்களாக அமைந்துவிடுகின்றன.

இவற்றுக்கெல்லாம் அப்பால், பருவ நோய்களும் அவ்வப்போது வாட்டி வதைத்துக்கொண்டிருக்கின்றது. கடந்த வருட நடுப்பகுதியில் இருந்து இவ்வருட ஜனவரி நடுப்பகுதி வரைக்கும், கடுமையாக மழை பெய்ததது. இதனையடுத்து, டெங்கு நுளம்புகள் பெருகியமையால், டெங்குகாய்ச்சல் தலைவிரித்தாடியது.

இதற்கிடையில், கடும் வெப்பமான காலநிலையின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இதனால் தோல் நோய்களின் தாக்கம் அதிகமாகக் காணப்படுமென லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா எச்சரித்துள்ளார்.

குழந்தைகளைத் தினமும் இரண்டு வேளை குளிக்க அனுமதிக்க வேண்டும் என்றும், தோல் நோய் உள்ள குழந்தைகளைக் காலை, இரவு என 20 நிமிடங்கள் தண்ணீரில் குளிப்பாட்டினால் கட்டுப்படுத்தலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் , குழந்தைகள் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டால், உட்புற இடங்களைப் பயன்படுத்தவும், தண்ணீர் மற்றும் திரவங்களைத் தவறாமல் குடிக்கவும், இந்த நிபந்தனைகளைப் பின்பற்றாவிட்டால், அவர்கள் வெப்ப அதிர்ச்சி நிலைமைகளால் இறக்கக்கூடும் என்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ள குழந்தைகளுக்குக் குளிப்பதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

கடுமையான வெப்பத்தால் ஏற்படும் தோல் நோய்கள், குழந்தைகள், சிறுவர்களையே கடுமையாகத் தாக்குகின்றன. அரச வைத்தியசாலைகளில் பல்வேறான மருந்துகளுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவுவதால், தனியார் வைத்தியசாலைகளையே நாடவேண்டும். அதற்கும் போதியளவில் நிதி வசதி இருக்காது.

இதேவேளை, தண்ணீர்க் கட்டணங்கள் பல மடங்குகளாக அதிகரிக்கப்பட்டுள்ளமையால், சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இரண்டு, மூன்று தடவைகள் நாளொன்றுக்கு நீராடுவது சாத்தியமாகாது.

எனினும், தோல் நோய்களில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கு மாற்று வழிமுறைகளே இல்லை.

இந்நிலையில், சில பாடசாலைகளில், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அதற்காகக் கடுமையான வெயிலில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டாம் என்றும் வலியுறுத்துகின்றோம். இந்த வெப்பத்தால், மரம், செடி, கொடிகள் காய்ந்து விடும், நீர்நிலைகள் வற்றி விடும். கரையோர ஆறுகளுக்குள் கடல் நீர் புகுந்துவிடும், நீர் வெட்டும் அமுலாகும்.

இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு, பாதுகாப்பான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்

No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பெண்கள் கட்டாயமாகத் தற்பாதுகாப்புக் கலைகளைக் கற்றேயாகவேண்டும். பண்டைக் காலத்தில் இருந்தே, நமது வீரப் பெண்மணிகள் எதிரிகளுடன் போராடும் வித்தைகளைக் கற்றிருந்தனர். வாள் வீச்சு, சிலம்பம், குதிரையேற்றம் போன்ற போரியல் பயிற்சிகளை, ஆண்களுக்கு நிகராகக் கற்றுக் கொண்டனர். இதனால் அவர்களின் இரத்தத்தில், வீரம் செறிந்திருந்தது.

இன்று, பெண்களை மதிக்காது அவமானப்படுத்தும் கயவர்கள் கூட்டம் அதிகமாகி விட்டார்கள். பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அதனால், பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்த வண்ணமிருக்கின்றன.

இத்தகைய சூழ்நிலைகளை பெண்கள் எதிர்கொண்டே ஆகவேண்டும். பெண்கள் தமக்கான அநீதிகளுக்கு எதிராகத் துணிச்சலுடன் போராடவேண்டும். தற்காப்புக் கலைகளைக் கற்றுக் கொண்டால், எவருக்கும், எந்நேரத்திலும் பயப்பிடத் தேவையில்லை.

ஆண்-பெண் பேதமின்றி, தற்பாதுகாப்புக் கலைகளை அனைவரும் கற்றுக்கொண்டால், மனவுறுதி, வீரம், தேகபலம் எல்லாமே இணைந்து விடுகின்றன. பெண்கள் சளைத்தவர்கள் அல்ல; எதிர்கொள்பவர்கள்.

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# திசைக் காட்டியின் திசையை காட்டும் இந்தியா



எம்.எஸ்.எம். ஐயூப்

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் 1971இல் தமது முதலாவது கிளர்ச்சியின் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டு ஆறு வருடங்களில் விடுதலை செய்யப்பட்டபோது, தமது கொள்கை பிரகடனத்தை வெளியிட்டனர்.

முதலாளித்துவ நிறுவனங்களின் உற்பத்திச் சாதனங்களைப் பறிமுதல் செய்யப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டு இருந்ததை மேற்கோள் காட்டி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கடந்த வருடம் பெப்ரவரி மாதம் அம்முன்னணியை விமர்சித்தார்.

அதற்குப் பதிலளித்த மக்கள் விடுதலை முன்னணியினதும் தேசிய மக்கள் சக்தியினதும் தலைவரான அனுர குமார திஸாநாயக்க அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் அப்போதைய உலக நிலைமைக்கு ஏற்ப எழுதப்பட்ட ஓர் ஆவணத்தில் தொற்றிக்கொண்டு இருக்காமல் 'அப்டேட்' ஆகுமாறு பிரேமதாசவுக்கு அறிவுரை கூறினார்.

திசைக் காட்டிச் சின்னத்தைக் கொண்ட தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் கடந்த வாரம் மேற்கொண்ட இந்திய விஜயத்தைப் பற்றி ஏனைய பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களுக்கும் அந்த பதில் பொருத்தமாகும் என்றே தெரிகிறது.

தமிழ் மக்களை தம்மிடமிருந்து அந்நியப்படுத்திய 'இந்திய விஸ்தரிப்பு வாதம்" என்றதொரு சித்தாந்தத்தை 1960களில் மக்கள் விடுதலை முன்னணி முன்வைத்திருந்தது. எனவே, இப்போது பலர் அன்று இந்திய விஸ்தரிப்பு வாதத்தைப் பற்றிப் பேசியவர்கள் இப்போது இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள் என்று கூறுகின்றனர்.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தையும் அதன் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளையும் மக்கள் விடுதலை முன்னணி கடுமையாக எதிர்த்ததது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்போது, ஏற்கெனவே மக்கள் விடுதலை முன்னணி தமது இரண்டாவது கிளர்ச்சியை ஆரம்பித்து இருந்தது. இந்த நிலையில், கிளர்ச்சிக்காரர்கள் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்கு வந்திருந்த இந்தியப் படைகளுக்கு எதிராகவும் தாக்குதல்களை நடத்தினர். இந்தியப் பொருட்களைப் பகிஷ்கரிக்குமாறு மக்களைக் கேட்டுக்கொண்டனர்.

அதனை நினைவூட்டி மேலும் பலர் இந்திய விஜயத்தை மேற்கொண்டதற்காக மக்கள் விடுதலை முன்னணியை விமர்சிக்கின்றனர்.

ஆரம்பத்திலிருந்தே மக்கள் விடுதலை முன்னணி தமது புதிய உறுப்பினர்களுக்கு ஐந்து விரிவுரைகள் மூலம் தமது அரசியல் சித்தாந்தத்தை வழங்கி வருகிறது. அவ்விரிவுரைகள், வகுப்புக்கள் என்று அழைக்கப்படுகின்றன. 1971இல் முதலாவது கிளர்ச்சிக்கு முன்னர் நடத்தப்பட்ட ஐந்து வகுப்புக்களில் ஒன்று 'இந்திய விஸ்தரிப்பு வாதம்" என்றழைக்கப்பட்டது. இந்தியா தம்மைச் சுற்றியுள்ள சிறிய நாடுகளை விழுங்கும் நீண்ட கால திட்டத்துடனேயே செயற்படுகிறது என்ற கருத்தே இதன் மூலம் வழங்கப்பட்டது.

இது இந்தியாவுடன் நீண்டகால பகையைக் கொண்டிருக்கும் சீனாவின் ஆளும் கட்சியான சீன கம்யூனிஸ்ட் கட்சி பரப்பிய சித்தாந்தமாகும். அக்காலத்தில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் என்.சண்முகதாசனின் தலைமையிலான சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட சீனக் கொள்கையை ஏற்றுக்கொண்ட ஆசியப் பிராந்தியத்தில் பல கட்சிகள் இச்சித்தாந்தத்தையும் ஏற்றுக்கொண்டன. அதனையே மக்கள் விடுதலை முன்னணி அக்காலத்தில் ஒரு விரிவுரையாக நடத்தியது.

1971இல் முதலாவது கிளர்சசி தோல்வியடைந்து கட்சித் தலைவர் ரோஹண விஜேவீர உள்ளிட்ட ஏனைய தலைவர்களும் பல்லாயிரக் கணக்கான உறுப்பினர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த சிறைவாசத்தின் போது கட்சித் தலைவர்களிடையே இடம்பெற்ற தொடர்ச்சியான கலந்துரையாடலின் விளைவாக அவர்களிடையே பெரும் சித்தாந்த மாற்றமொன்று ஏற்பட்டது. அவர்கள் சீன சார்பு கொள்கையைக் கைவிட்டனர்.

அதேவேளை, இந்திய விஸ்தரிப்பு வாதம் என்ற விரிவுரையின்போது, தமிழ் விரோத கருத்துக்களும் முன்வைக்கப்படுவதாக விமர்சனங்கள் எழுந்தன. இக்காரணங்களால் மக்கள் விடுதலை முன்னணியினர் 1972களில் 'இந்திய விஸ்தரிப்பு வாதம்' என்ற வகுப்பைக் கைவிட்டனர். அக்கட்சித் தலைவர்கள் 1977இல் சிறையிலிருந்து விடுதலை பெற்று மீண்டும் வெளியே பிரசார வேலைகளை ஆரம்பித்த போதிலும், 'இந்திய விஸ்தரிப்புவாதம்' என்ற பதம் ஒருபோதும் எங்கும் முன்வைக்கப்படவில்லை.

நாம் ஏற்கெனவே கூறியதைப் போல் 1987இல் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவும் கைச்சாத்திட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையும் அதன் கீழ் இலங்கைக்கு வந்த இந்தியப் படைகளையும் அதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறையையும் எதிர்த்து மக்கள் விடுதலை முன்னணி நடத்திய போராட்டமே இதற்குக் காரணமாகும்.

எனினும், அக்கட்சியானது தொடர்ச்சியாக இந்தியாவை எதிர்த்த கட்சியல்ல. அவர்களது இரண்டாவது கிளர்ச்சிக்கு முன்னர் 1980களின் ஆரம்பத்தில் அக்கட்சி இந்திய ஆதரவு நிலைப்பாட்டிலேயே இருந்தது. இந்தியா சோவியத் ஒன்றியம் உள்ளிட்ட சோஷலிச நாடுகளுக்கு சார்பான கொள்கையைக் கடைப்பிடித்தமையே அதற்குக் காரணமாகும். இந்தியாவுக்கு இரு புறத்திலும் இருந்த பாகிஸ்தானும் வங்காளதேசமும் அமெரிக்க ஆதரவு நாடுகளாக இருந்தன. அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவும் அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். எனவே, ஜே.ஆர்., இந்தியாவை மூன்று புறங்களால் முற்றுகையிட அமெரிக்காவுக்கு உதவுகிறார் என ரோஹண விஜேவீர கூறி வந்தார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவருடன் விஜேவீர நடத்திய நேர்காணல் ஒன்று எனக்கூறி, 1984இல் மக்கள் விடுதலை முன்னணி கேள்வி-பதில் ரீதியிலான ஆவணம் ஒன்றை வெளியிட்டிருந்தது. அதிலும் இந்த வாதம் முன்வைக்கப்பட்டு இருந்தது. பின்னர் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தோடு நிலைமை மாறி அக்கட்சி இந்தியப் படைகளுக்கு எதிராக ஆயுதப் போரிலும் இறங்கியது.

இத்தாக்குதல்கள் அவர்களது இரண்டாவது கிளர்ச்சியின் ஓரங்கமாகவே இடம்பெற்றது. அக்கிளர்ச்சி இலங்கை அரச படைகளால் மிக மூர்க்கமாக அடக்கப்பட்டு, ஒருவரைத் தவிர, மக்கள் விடுதலை முன்னணியின் சகல அரசியல் குழு உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர். சுமார் இரண்டரை வருடங்களில் தென் பகுதியில் 60,000க்கு மேற்பட்டோர் அவ்வடக்கு முறையின்போது கொல்லப்பட்டனர்.

விந்தை என்னவென்றால், உயிர் தப்பிய மக்கள் விடுதலை முன்னணியின் ஒரே அரசியல் குழு உறுப்பினரான சோமவன்ச அமரசிங்க, இந்தியா ஊடாக பிரித்தானியாவுக்கு தப்பிச் சென்றமையே. அக்கட்சியின் அடுத்த தலைவராக 2001இல் மீண்டும் நாடு திரும்பிய அவர், இலங்கையில் தாம் நடத்திய முதலாவது பொதுக் கூட்டத்தின்போது, தமக்குத் தப்பிச் செல்வதற்காக உதவியமைக்காக இந்திய அரசாங்கத்துக்கும் இந்தியப் பிரதமர் வி.பி.சிங்குக்கும் நன்றி தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தற்போது வேகமாக பிரபல்யம் அடைந்து வருவதே இந்தியா கருத்து பரிமாறலுக்காக அதன் தலைவர்களுக்கு இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது என்பதில் சந்தேகமே இல்லை. அண்மைக் காலமாக அக்கட்சியின் பக்கம் மக்கள் அலை அலையாகத் திரும்புவதாகத் தெரிகிறது.

சுகாதார கொள்கை நிறுவனம்(Institute Of Health Policy -IHP) 2022 இலிருந்து நடத்தி வரும் கருத்து கணிப்புகளின் மூலமும் இது தெரிய வருகிறது. இக்கருத்துக் கணிப்புக்கள் விஞ்ஞானபூர்வமானதல்ல என்று இது வரை எவரும் கூறவில்லை. ஜனாதிபதித் தேர்தலொன்று நடத்தப்பட்டால் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க 50 சதவீத வாக்குகளைப் பெறுவார் என்று இறுதியாகக் கடந்த டிசெம்பர் மாதம் தாம் நடத்திய கருத்துக் கணிப்பின் மூலம் தெரியவந்ததாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த அலையை பலம் வாய்ந்த நாடுகளின் தூதரகங்கள் உணர்ந்துள்ளதாகவே தெரிகிறது. 2022இல் அனுராவை சந்தித்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கடந்த ஒக்டோபர் மாதம் மீண்டும் அவரை அவரது அலுவலகத்துக்குச் சென்றே சந்தித்தார். முன்னாள் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயும் கடந்த நவம்பர் மாதம் அவரை சந்தித்தார். ஜனவரி 19ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களைச் சந்தித்தனர். புதிய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, ஜனவரி 23ஆம் திகதி அவர்களைச் சந்தித்தார். ஜனவரி 31ஆம் திகதி ஜேர்மன் தூதுவர் கலாநிதி பீலிக்ஸ் நியூமானும் அனுராவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தப் பின்னணியில் தான் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் இந்திய அழைப்பின் பேரில் இந்தியாவுக்குச் சென்று அந்நாட்டில் வெளிநாட்டு அமைச்சர் எஸ். ஜெயசங்கர், வெளியுறவுத்துறை செயலாளர் வினாய் மோகன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தொவல் போன்ற மிகவும் உயர் அதிகாரிகளைச் சந்தித்துள்ளனர். தே.ம.சவின் பிரபல்யம் காரணமாக இந்தியா அக்கட்சிக்கு வழங்கிய இந்த அங்கீகாரம் அப்பிரபல்யத்தை மேலும் வலுப்பெறச் செய்துள்ளது.

அரச தலைவர் அரசியலமைப்பையே மதிக்காத, ஊழல் மலிந்த ஒரு நாட்டில் கருத்துக் கணிப்புக்கள் யதார்த்தமாகுமா என்று சிலர் கேள்வி எழுப்பலாம்.

ஆனால், வெளிநாட்டுத் தூதரகங்கள் அதனைப் புறக்கணித்து வரப்போகும் நிலைமைகளைச் சந்திக்கத் தயாராவதையே காண்கிறோம்.

## கடிதங்கள்

### பெருமளவில் மணல், மரக் கடத்தல்

முல்லைத்தீவு-தேராவில், நஞ்சுண்டான் குளம் சூழலில் பெருமளவில் மணல் அகழ்வு நடைபெறுவதுடன், மரங்களும் அதிகளவில் வெட்டி எடுத்துச் செல்லப்படுவதாக அக்கிராம மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

தேராவில் கிராமத்தில் இருந்து சுமார் 6 கிலோ மீற்றர் தூரத்தில் நஞ்சுண்டான் குளம் உள்ளது. இக்குளத்தின் சூழலில் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக மணல் அகழ்வும் களவாக மரம் வெட்டுதலும் இடம்பெறுகின்றது.

மணல் அகழ்வுக்காக பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் இம்மணல் அகழ்வுடன் இராணுவத்தினர், பொலிஸார், வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் தொடர்புபட்டுள்ளதாகவும் கிராம மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

மீள் குடியேற்ற காலங்களில் குடிசைகள் அமைப்பதற்கு சிறு தடிகள் கூட வெட்டக் கூடாது என உத்தரவிட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும், கடத்தலுடன் தொடர்புடையவர்களுக்கு உதவி புரிகின்றார்களா என சந்தேகம் எழுகிறது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

- நடராசா கிருஸ்ணகுமார்



# பணிப்பகிஷ்கரிப்பால்


72 சுகாதார தொழிற்சங்கங்கள் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பை செவ்வாய்க்கிழமை (13) முன்னெடுத்திருந்தனர். இதனால், வெளி நோயாளர்கள் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். அத்துடன், அன்றாட சிகிச்சைகளுக்கு வந்தவர்களும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியிருந்தனர்.

சுகாதார தொழிற்சங்கங்களின் பணிப்பகிஷ்கரிப்பை அடுத்து, அந்த சேவைகளில் பாதிப்புகள் ஏற்படாத வகையில், இராணுவத்தினர் களமிறக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

படங்கள்: தமிழ்மிரர் நிருபர்கள்




கொழும்பில்...







மன்னாரில்...




மூதூரில்...




நுவரெலியாவில்...



வவுனியாவில்...



## ஜெயசிறிலுக்கு கலாநிதி பட்டம்

அமெரிக்க உலகத் தமிழ் பல்கலைக்கழகமானது, காரைதீவு முன்னாள் தவிசாளரும் பிரபல சமூக செயற்பாட்டாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு சமூக சேவைக்கான மதிப்புறு முனைவர் (Honorary Doctorate) கலாநிதி பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது .

இந்நிகழ்வு கொழும்பு- தாஜ்சமுத்ரா ஹோட்டலில் சனிக்கிழமை(10) இரவு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

- வி.ரி.சகாதேவராஜா









## உபகரணங்கள் கையளிப்பு

புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இலங்கை கடற்படை மற்றும் ஏறாவூர் அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டியில் கிடைக்கப் பெற்ற மொத்த வருமானமான 93,200/= பணத்தில் போட்டோகொப்பி இயந்திரம் ஒன்றும் நவீன ரக ஒலிபெருக்கி ஒன்றும் புத்தளம் ஆயுர்வேத வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் முனைவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு புத்தளம் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றுள்ளதுடன் லெஜன்ட்ஸ் கழகத்தின் தலைவர் ஜனோசன் மற்றும் உறுப்பினர் பினோஸ் ஆகியோர் லெஜன்ட்ஸ் கழகத்தின் சார்பில் இவைகளை கையளித்துள்ளனர்.

- எம்.யூ.எம்.சனூான்



## உத்தியோகபூர்வ பதவியேற்பு

தேசிய கல்வி நிறுவனத்தின் மீப்பே வளாகத்தில் அமைந்துள்ள கல்வி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி துறையின் பணிப்பாளராகக் கலாநிதி எஸ்.கருணாகரன் திங்கட்கிழமை (12) பதவியேற்றுக்கொண்டுள்ளார் .

இவர் மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- பி.கேதீஸ்

## ராஜசிங்க நரேந்திர உலோகச் சிலை திறப்பு

கொள்ளுப்பிட்டி-வாலுகாராம உட்பட பஞ்ச மகா விகாரை விகாராதிபதி விசித்ர பானக வண. மஹரகம நந்த நாயக்க தேரரின் 70 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கொள்ளுபிட்டிவாலுகாராம விகாரையில் நிறுவப்பட்டுள்ள கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க நரேந்திரனின் உலோகச் சிலையை திரை நீக்கம் செய்யும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் திங்கட்கிழமை (12) நடைபெற்றது.

தாய்லாந்திலுள்ள மகா சங்கத்தினர் உள்ளிட்ட தாய்லாந்து நன்கொடையாளர்களின் ஆதரவுடன் இந்த உலோக சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்து கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க நரேந்திரனின் உலோகச் சிலையும் ஜனாதிபதி திறந்து வைத்தார். இதனுடன் இணைந்ததாக விகாரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வண. வெலிவிட்ட சரணங்கர சங்கராஜ தேரரின் சிலையும் திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது.




## பாராட்டு விழா

புத்தளம், இளங்கலை பட்டதாரிகளின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழா நிகழ்வுகள் அண்மையில் புத்தளம் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

2022/23 ல் உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை அரச பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட புதிய மாணவர்களைக் கௌரவிக்கும் முகமாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- எம்.யூ.எம்.சனூான்




## "எமேஜிங் ட்லெண்ட் - 2024"

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (GMMS) புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு, " எமேஜிங் ட்லெண்ட் - 2024" எனும் தொனிப்பொருளில் சனிக்கிழமை (10) இடம்பெற்றுள்ளது.

பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழா பெற்றோர்களின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது .

- எம்.எஸ்.எம்.ஸாகிர்




இன்று மூன்றாவது போட்டி:

# ஆறுதல் வெற்றி பெறுமா ஆப்கானிஸ்தான்?



இலங்கை, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது பல்லேகலவில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் வென்ற இலங்கை தொடரை ஏற்கெனவே கைப்பற்றியுள்ள நிலையில், இன்றைய போட்டியில் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் ஷெவோன் டானியல், சகலதுறைவீரர்கள் சஹான் ஆராச்சிகே, சாமிக கருணாரத்ன, டுனித் வெல்லலாகே ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக ஆப்கானிஸ்தான் அணியில் துடுப்பாட்டவீரர் றியாஸ் ஹஸன், வேகப்பந்துவீச்சாளர் நவீட் ஸட்ரான் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்படுமெனக் கூறப்படுகிறது.

முதலிரண்டு போட்டிகளிலும் ஒரு கட்டத்தில் இலங்கைக்கு சவால் விடுமளவுக்கு ஆப்கானிஸ்தான் இருந்த நிலையில் அவ்வணியிடமிருந்து தொடர்ச்சியான பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.



ஆப்கானிஸ்தானுக்கெதிரான தொடருக்கான இலங்கைக் குழாமில்

# சமீரவைப் பிரதியிட்ட பினுர பெர்ணாண்டோ

ஆப்கானிஸ்தானுக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமில், காயமடைந்த துஷ்மந்த சமீரவுக்குப் பதிலாக பினுர பெர்ணாண்டோ இடம்பெற்றுள்ளார்.

குழாம்: வனிடு ஹசரங்க (அணித்தலைவர்), சரித் அசலங்க (உப அணித்தலைவர்), பதும் நிஸங்க, குசல் மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா, குசல் பெரேரா, அஞ்சலோ மத்தியூஸ், தசுன் ஷானக, மகேஷ் தீக்‌ஷன, பினுர பெர்ணாண்டோ, மதீஷ பத்திரண, டில்ஷான் மதுஷங்க, நுவான் துஷார, அகில தனஞ்சய, கமிந்து மெண்டிஸ், சதீர சமரவிக்கிரம.



இலங்கைக்கெதிரான தொடருக்கான

# ஆப்கானிஸ்தான் குழாமில் முஜீப், ரஷீட் இல்லை

இலங்கைக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான ஆப்கானிஸ்தான் குழாமில் முஜீப் உர் ரஹ்மான், ரஷீட் கான் ஆகியோர் இடம்பெறவில்லை.

விரலில் ஏற்பட்ட முறிவு காரணமாக குழாமில் முஜீப் இடம்பெறவில்லை என்பதோடு, காயத்திலிருந்து குணமடைந்து வருவதன் காரணமாக அணித்தலைவர் ரஷீட் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: இப்ராஹிம் ஸட்ரான் (அணித்தலைவர்), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் (விக்கெட் காப்பாளர்), மொஹமட் இஷக் (விக்கெட் காப்பாளர்), ஹஸரத்துல்லாஹ் ஸஸாய், குல்படின் நைப், மொஹமட் நபி, நஜிபுல்லாஹ் ஸட்ரான், அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய், கரிம் ஜனட், ஷரஃபுதின் அஷ்ரஃப், பஸல்ஹக் பரூக்கி, பரீட் அஹ்மட், நவீன்-உல்-ஹக், நூர் அஹ்மட், ஃபடார் மொமன்ட், கேய்ஸ் அஹ்மட்.

முல்லை கழகங்களுக்கிடையிலான கபடி:

# சம்பியனாகிய முத்தமிழ்

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு மாவட்ட கழகங்களுக்கிடையே அண்மையில் பகலிரவாக நடைபெற்ற ஆண்களுக்கான கபடித் தொடரில் வன்னிவிளாங்குளம்-அம்பாள்புரம் கிராமத்தின் முத்தமிழ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியதுடன், பெண்களுக்கான கபடித் தொடரில் பாலிநகர் ஸ்கைலாப் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

ஆண்களுக்கான தொடரில் பாலிநகர் மகா வித்தியாலய அணியை வென்றே முத்தமிழ் சம்பியனாகியதுடன், பெண்களுக்கான தொடரில் முத்தமிழை ஸ்கைலாப் சம்பியனாகியிருந்தது.







இங்கிலாந்துக்கெதிரான

# இந்தியக் குழாமில் தேவ்டுட் படிக்கல்



இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டுக்கான இந்தியக் குழாமிலிருந்து முழங்கால் உபாதை காரணமாக லோகேஷ் ராகுல் விலகியுள்ளார். இந்நிலையில், ராகுலை குழாமில் தேவ்டுட் படிக்கல் பிரதியிட்டுள்ளார். அந்தவகையில் விராட் கோலி தொடர்ந்தும் தனிப்பட்ட காரணங்களுக்காக குழாமில் இல்லாததோடு, ஷ்ரேயாஸ் ஐயர் குழாமிலிருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில் மூன்றாவது டெஸ்டில் ஸஃப்ராஸ் கான் அறிமுகத்தை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தெலங்கானா

# ‘ஹுக்கா’ ‘பார்லர்’களுக்கு தடை



தெலுங்கானா முழுவதும் ‘ஹுக்கா’ பார்லர்’களுக்கு (*Hookah Lounge*) அம்மாநில அரசு தடை விதித்துள்ளது.

தெலங்கானா மாநில சட்டப்பேரவையில் தற்போது பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால பட்ஜெட் மீது ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விவாதங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே இக்கூட்டத்தில் சில மசோதாக்களுக்கும் பேரவை ஒப்புதல் அளித்தது.

இந்நிலையில், திங்கட்கிழமை (12) முதல்வர் ரேவந்த் ரெட்டிசார்பில் தெலங்கானா மாநிலம்முழுவதும் ‘ஹுக்கா பார்லர்’களுக்கு தடை விதிக்கும் மசோதாவை பேரவை விவகாரத்துறை அமைச்சர் தாக்கல் செய்தார்.

கர்நாடகா

# ஆபரேஷன் தியேட்டரில் போட்டோ ஷூட்



கர்நாடகாவில் அரச மருத்துவர் தனது வருங்கால மனைவியுடன் ஆபரேஷன் தியேட்டரில் (சத்திர சிகிச்சை பிரிவு) எடுத்த போட்டோ ஷூட்டுக்கு எதிர்ப்பு எழுந்ததை தொடர்ந்து, அந்த மருத்துவரை பணியில் இருந்து நீக்கி, மாநில சுகாதாரத்துறை அமைச்சர் தினேஷ் குண்டுராவ் உத்தரவிட்டுள்ளார்.

கர்நாடக மாநிலம் - சித்ரதுர்கா மாவட்டத்தில் உள்ள பரமசாகர் அரச மருத்துவமனையில் அபிஷேக் (29) என்பவர் மருத்துவராக பணியாற்றி வந்தார். அவர் அங்குள்ள ஆபரேஷன் தியேட்டரில் தன் வருங்கால மனைவியுடன் ‘ப்ரீ வெட்டிங் போட்டோ ஷூட்’ (திருமணத்துக்கு முன்பாக எடுக்கப்படும் புகைப்படம்) நடத்தியுள்ளார்.

சத்திர சிகிச்சை பிரிவில் நோயாளிக்கு அவர் அறுவை சிகிச்சை செய்வதை போலவும், அதற்கு அவரின் வருங்கால மனைவி உதவி செய்வதை போன்றும் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான படங்கள் மற்றும் வீடியோவும் சமூக வலைத்தளங்களில் வைரலானது. இதற்கு சமூக செயற்பாட்டாளர்களும், மருத்துவர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கர்நாடக சுகாதாரத்துறை அமைச்சர் தினேஷ் குண்டுராவ் கூறுகையில், “அரசுமருத்துவமனைகள் மிக உன்னதமான நோக்கத்துக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றைதன் சொந்த தேவைக்கு பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது. மருத்துவர் அபிஷேக் மருத்துவமனையின் மாண்பை குலைக்கும் வகையில் செயல்பட்டது உறுதியாகியுள்ளது.

எனவே, அவரை உடனடியாக பணி நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளேன். மேலும் இதுகுறித்து விளக்கம் அளிக்குமாறு பரமசாகர் அரசு மருத்துவமனையின் தலைமை மருத்துவருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது” என தெரிவித்தார்.

சென்னை

# இராஜினாமா செய்தார் செந்தில்

கடந்த 2023ஆம் ஆண்டு 14ஆம் திகதி சட்டவிரோத பணப் பரிமாற்ற தடை சட்ட வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜி அமுலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர், புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள செந்தில் பாலாஜி மீதான விசாரணையும் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், அமைச்சர் பதவியை செந்தில் பாலாஜி இராஜினாமா செய்துள்ளார். 8 மாதங்களாக இலாகா இல்லாத அமைச்சராக நீட்டித்த நிலையில், செந்தில் பாலாஜி பதவியை இராஜினாமா செய்துள்ளார். புழல் சிறையில் இருந்து தனது இராஜினாமா கடிதத்தை அனுப்பியதாக தகவல் வெளியாகியுள்ளது. அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளிவரும் எனவும் கூறப்படுகிறது.

பாகிஸ்தான்

# “எதிர்க்கட்சி வரிசையில் அமர்வோம்”



பாகிஸ்தானில் ஆட்சி அமைப்பதற்கு 133 எம்.பி.க்களின் ஆதரவு தேவை. ஆனால், தேர்தலில் எந்த கட்சிக்கும் இந்த பெரும்பான்மை பலம் கிடைக்காததால் புதிய அரசு அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. எனவே, கூட்டணி அரசு அமைப்பதற்கான பணிகளை அரசியல் கட்சிகள் தொடங்கி உள்ளன.

இந்நிலையில், பாகிஸ்தானில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் அதிக இடங்களைக் (101) கைப்பற்றியிருந்தாலும், பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர முடிவு செய்துள்ளதாக முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் தெஹ்ரீக்-ஏ-இன்சாப் (பி.டி.ஐ.) கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் மூத்த தலைவர் கோஹர் அலி கான் கூறியதாவது,

“பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் (பி.எம்.எல்-என்), பாகிஸ்தான் மக்கள் கட்சி (பி.பி.பி.) ஆகிய இரு கட்சிகளுடனும் எங்களுக்கு கொள்கை முரண் உள்ளது. எனவே, இதில் எந்தக் கட்சியுடனும் இணைந்து ஆட்சியமைக்க மாட்டோம். அதைவிட, பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துவிடலாம் என்று முடிவு செய்துள்ளோம்.

புதிய பாராளுமன்றத்தில் ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியாக பி.டி.ஐ. செயல்படும்” என தெரிவித்துள்ளார்.

வட கொரியா

# “ஆத்திரத்தை தூண்டினால் அழித்துவிடுவோம்”

வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், தனது நாட்டின் ஆயுத பலத்தை அதிகரித்து அச்சுறுத்துவதாலும், பதில் நடவடிக்கையாக அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் ஒருங்கிணைந்த இராணுவ பயிற்சிகளை தீவிரப்படுத்துவதாலும் கடந்த சில மாதங்களாக கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.

தென் கொரியாவுடனான அனைத்து பொருளாதார ஒத்துழைப்பையும் முறித்துக்கொள்வதாக வட கொரியா அறிவித்துள்ளது. சமீபத்தில் இராணுவ வீரர்களிடையே கிம் ஜாங் உன் பேசும்போது, போருக்கு தயார் நிலையில் இருக்கும்படி தெரிவித்தார்.

இந்த பரபரப்பான சூழ்நிலையில், வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு சென்று பணிகளை பார்வையிட்டார். அப்போது பேசிய அவர், “தென் கொரியாவுடன் தூதரக உறவை தொடரவோ பேச்சுவார்த்தை நடத்தவோ விருப்பம் இல்லை என்றும், தொடர்ந்து ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டால் தென் கொரியாவை வட கொரியா அழித்து நிர்மூலமாக்கிவிடும்” என மிரட்டல் விடுத்துள்ளார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 14 பெப்ரவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.